UNIVERSITY ... LIBR... 02 JUN ... PERIODICALS

SEND IN YOUR NEWS TO THE EDITOR THE MORNING STAR

NO. 17, Frances Road,
Colombo - 06
Sri Lanka


# THE MORNING STAR
# உதயதாரகை
uthayatharakai

Registered as a News paper at the General Post Office, Sri Lanka

Established 1841, A Christian Fortnighty Published Every other Friday

Vol. 174 - Jaffna - Friday November 28 2008 No. 04

Righteousness Exalteth A Nation, But Sin is a Reproach to any People

**Foreign:**
Annual subsription $ 10.00
Life subscription $100.00

**Local**
Annual subscription Rs. 100.00
Life Subscription Rs.1000.00

www. csiJaffnadiocese.com
Editor
36, 5\2 Sinsapa Road,
Colombo - o6
Sri Lanka


## ஒப்புரவு - Reconcilation



மானிட வாழ்வின் பொறுப்பு என்பது, பல நிலைகளில் நோக்கப்படுவதும் அதற்கான பொருள் விளக்கமானது பல கோணங்களில் புரியப்படுவதும் யதார்த்த ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படுவதும் பொதுவான தன்மை யாகும். தற்கால நோக்கில் மானிட வாழ்வில் உறவு, தொடர்பு, நட்பு என்பனவற்றிற்கான உரிய பொருள் விளக்கமானது.

எந்தவகையில் அர்த்தப்படுத்தப்படுவது என்பதும், அதனது உரிய புரிதல் ஆனது எவ்வாறு மாற்றங்களை உண்டுபண்ணும் என்பதும் சிந்திக்கப்பட வேண்டிய ஒரு பெரிய உண்மை ஆகும்.

இதன் அடிப்படையில் அனைவருக்கும் பொருத்தமான வேண்டப்பட்ட ஒன்று ''ஒப்புரவு'' என்பதன் விளக்கும் ஆகும். ஏனெனில் மானிட வாழ்வானது ஒரு தனி மனிதனையோ அல்லது ஒரு குறித்த குழுமத்தையோ, பிரிவையோ கொண்டது அல்ல. அது அனைவரையும் உள்ளட க்கியதான சமய, சமூக, அரசியல், பண்பாடு உடைய தன்மையில் நோக்கப்பட வேண்டும்.

ஒப்புரவு என்று மொழியாக்கம் செய்யப்பட ஆங்கிலச் சொல்லான - Reconcilation என்பதற்குரிய பொருள் - இருவருக்கிடையே ஏற்படும் மோதலுக்குப்பின் ஏற்படும் உடன்பாடு என்பதே ஆகும். அதாவது ஒப்பான, இணையான ஏற்றத்தாழ்வற்ற நிகரான உறவு இருவருக்கிடையே ஏற்படுவதைத்தான் இவ் ஆங்கிலச் சொல் குறிக்கிறது. ஒப்புரவு என்பது பிரிந்து சென்ற கணவன் - மனைவி இருவரும் மீண்டும் மனமொத்து ஒன்று சேருகின்ற நிலை ஆகும். இது Katallage என்ற கிரேக்கப் பெயர்ச் சொல்லில் இருந்து வருகிறது. போருக்குப் பின் ஏற்படும் சமாதானத்தையும் இது குறிக்கிறது.

சமயக் கண்ணோட்டத்தில் நோக்கும் போது, பாவத்தினால் சிலகாலம் பிரிந்திருந்த மனிதர் மீண்டுமாகக் கடவுளுடன் சமாதானம் அடைந்து அவரின் அருளையும், அன்பையும் பெறுவது ஒப்புரவாகுதல் ஆகும். கிறிஸ்தவத் திருமறையில் இதற்கு ஏற்றால் போல் பல செய்திகள், சம்பவங்கள் உண்டு. குறிப்பாக புதிய ஏற்பாட்டில் பவுல் அடிகளாரின் எழுத்துக்களில் ''ஒப்புரவு'' சார்ந்த பல எண்ணக்கருத்துக்கள் உண்டு. பவுலின் கருத்துப்படி புதுப்படைப்பின் அடிப்படையாக ஒப்புரவு அமையப் பெற்றுள்ளது. அதனால் பழையன நீங்கி புதியன உதய மாகின்றன. ஆதலின் ஒப்புரவு நிலை புதுவாழ்வி னைக் குறிக்கின்றது.

மானிடர் தமது பாவத்தினால் கடவுளை விட்டு விலகி பின்வாங்கி வாழ்ந்தபோது கடவுள் தமது மகன் இயேசு கிறிஸ்துவை சிலுவைப்பாடு களுக்கு ஒப்புக்கொடுத்து மானிடரைத் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டார். இச் சூழலில் ஒப்புரவாகுதல் என்பது கடவுளால் நடைபெற்ற ஒன்றேயாகும். ஆகவே ஒப்புரவாகுதல் என்பது மானிடருக்குக் கடவுள் அளித்த கொடையாகும். (Reconcilation is a gift of God). கடவுள் தனக்கும், மனுக்குலத்திற்கும் இடையே இருந்த பகையை நீக்கி, மனிதர் கடவுளோடு தொடர்புகொள்ள கிறிஸ்துவை வழியாக்கியிரு க்கிறார் என W. G. Kummel என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.

2 கொரிந்தியர் 5:18-20ல் கடவுள் முழு உலகத்தையும் கிறிஸ்துவைக் கொண்டு தம்மோடு ஒப்புரவாக்கினார் (Cosmic Reconciliation) எனப் பவுல் குறிப்பிடுகின்றார். அத்துடன் ஒப்புரவாகுதலின் பணியை நமக்குக் கொடுத்திருப்பதால் அது இன்றும் தொடர்ந்து செய்ய வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் கடவுள் முழு உலகத்தையும் தன்னோடு ஒப்புரவாக்கிக் கொள்ளத் திட்டமிட்டுள்ளார். எனவே மானிடர் அனைவரும் கடவுளோடு நல்லுறவு கொள்ளும் வரைக்கும் ஒப்புரவாகுத்லின் பணி தொடருகிறது. இவ் ஒப்புரவுப் பணி இறந்த காலமும், நிகழ் காலமும் உள்ளடங்கியதாக அமையப்பெறுகின்றது.

அத்துடன் இது கடவுளோடு மட்டும் உறவு கொள்வதோடு நின்று விடுவதில்லை. பிற மக்களோடும் இந்த ஒப்புரவு நிகழ வேண்டிய ஒன்றாகும். தடையாக நின்ற சட்டங்கள், மரபுகள், பாரம்பரியங்கள் போன்ற நடுச் சுவர்கள் சிலுவையால் தகர்க்கப்படுகின்றன. இவ்வாறு வெவ்வேறு இனத்தவர் ஒரே உடலில் பங்கடைகிறார்கள். (எபேசியர் 2:16-18) இதனையும் தாண்டிய ஓர் ஒட்டுமொத்த நிலையிலும் ''ஒப்புரவாகுதல்'' புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

**Rev. V. Pathmathayalan**

## கிழக்கில் பணிகள்

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் தென்னிந்திய திருச்சபையின் பணிகள் உத்வேகத்துடன் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக ஊறணி, பெரியநீலாவணை, அக்கரைப்பற்று, கண்ணகி புரம், காஞ்சிரங்குடா ஆகிய இடங்களில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி எமது பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவையொட்டி பெரிய நீலாவணையில் நன்றி செலுத்தும் வழிபாடு இடம்பெற்றது.

இதே நாள் பேரயர் அம்மா கலாநிதி தயா தியாகராஜா அவர்களினால் பிள்ளைகளுக்காக இலவச மாலை நேர வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் அருட்பணி உதயனன் சர்மாவிற்கு ஒரு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது. மேலும் நற்செய்திப் பணியாளர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அப் பிரதேசத்தல் அருட்பணியாளர்கள் கிருபைநாதன், ஜெரோம் போல், திருவாளர்கள் பிறற்லெற், கணேஷ், செல்வி சந்திரலேகா ஆகியோர் கடவுளின் பணியை சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகின்றனர். கிழக்கு மாகாணத்தின் பிராந்தியக் குரு அருட்பணி. றூபன் அவர்களின் கண்காணிப்பில் ஊழியம் நல்ல முறையில் இடம்பெற்று வருகின்றது.

## இரண்டாம் ஆண்டு நிறைவில் பேராயர்



நமது பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா அவர்கள் பேராயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட இரண்டாம் ஆண்டு நிறைவானது 21.08.2008ம் திகதி உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபையில், நன்றி செலுத்தும் தூய நற்கருணை வழிபாடாக இடம்பெற்றது. யாழ் குடாநாட்டைச் சேர்ந்த பல சபையினரும், குருமார்களும் இவ்வழிபாட்டில் பங்கெடுத்தனர்.வழிபாட்டினை அருட்பணியாளர்களான A.C. ஆர்ணல்ட், T. H. வசந்தகுமார், K.S. யோசெப் ஆகியோர் நடாத்தினர். இறை செய்தியை இளைப்பாறிய பேராயர் அறிவர் S. ஜெபநேசன் அவர்கள் ஆற்றினார். வழிபாட்டைத் தொடர்ந்து, யாழ் ஆதீனத்தின் கலை, கலாச்சார மற்றும் தொடர்பு மையப் பிரிவினால் ஒரு கதாப்பிரசங்க நிகழ்வு நடாத்தப்பட்டது. இவ் வழிபாட்டிற்கான சகல ஆயத்தங்களையும் ஊழியர் சங்கச் செயலாளர் அருட்பணி T. H. வசந்தகுமார் அவர்கள் முன்னின்று நடத்தினார். அனைவரும் ஐக்கிய மதிய உணவில் பங்கெடுத்து மகிழ்ந்தனர்.



குறிப்பாக இவ் வழிபாடு இடம் பெறுவதற்கு உடுப்பிட்டித் திருச்சபை மக்கள் முன்னின்று உழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் பெரிய நீலாவணையில் நன்றி செலுத்தும் வழிபாடானது இடம் பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட பிராந்தியக் குரு அருட்பணி S. றூபன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது. பேராயர் அம்மா கலாநிதி திருமதி. தயா தியாகராஜா அவர்களும் இதிலே பங்கெடுத்ததுடன், சிறுவர்களுக்கான இலவச மாலை நேர வகுப்பை ஆரம்பித்து வைத்ததுடன், சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களையும் அன்பளிப்பாக வழங்கினார். பெரிய நீலாவணையில் தென்னிந்தியத் திருச்சபையின் ஊழியனாக அருட்பணி S. செல்வந்தா அவர்கள் பணியாற்றி வருகின்றார்.

## பெரிய நீலாவணை



கிழக்கு மாகாணத்தில் பெரிய நீலாவணையானது சுனாமிப் பேரழிவினால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகும். 1700 குடும்பங்கள் மீளவும் புனர்நிர்மாணம் செய்யப்படும் எனும் நம்பிக்கையில், குடியமர்த்தப்பட்டுள்ளனர். இது ஒரு பெரும் சவால் நிறைந்த விடயமாகும். மக்களின் பாடு, துன்பங்களின் மத்தியில் இலகுவில் பூர்த்தி செய்யப்பட முடியாத சூழ்நிலையில் நாம் அனைவரும்,



அப்பகுதி மக்களுக்கு உதவி செய்யும் வகையில் அருட்பணி S. செல்வந்தா அவர்கள் பெரிய நீலாவணையில்ஊழியம் செய்கிறார். இவர் 2008 யூன் மாதம் பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா அவர்களினால் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். அருட்பணி S. செல்வந்தாவின் மனைவி அப்பகுதியில் குடும்பநல மருத்துவ தாதியாகவும், சமூக வேலைத்திட்டங்களில் சேவையாற்றுவது எமக்கு மிகவும். பயன் உள்ளதாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணகிபுரம் தென்னிந்திய திருச்சபை**



திருச்சபையின் பணிகள் சிறப்பாக அமைவதற்கு ஏற்ற வகையில் திருச்சபைக் குருமனை, சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம் என்பன நிர்மாணிக்கப்பட்டு, அப்பகுதிப் பிராந்தியக குரு அருட்பணி S. றூபன் அவர்களினால் பிரதிஷ்டை செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அங்கு ஆரம்பித்து வைக்கப்பட்ட, சிறுவர் பகல் பராமரிப்பு நிலையத்தில் 40 சிறுவர்கள் பயன் பெறுகின்றனர். சிறுவர்களின் தேவைகள் சிறப்பாக சந்திக்கப்பட்டு வருகின்றன. இதனூடாக நம்பிக்கை உள்ள ஒரு எதிர்காலம் பெரிய நீலாவணையில் உதயமாகிறது என்பது இப்போது உணரப்படுகிறது.

**வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நிகழ்வு தேசிய திருச்சபையாக யாழ் ஆதீனம்**




1947ம் ஆண்டு தென்னிந்திய திருச்சபை உருவாக்கம் பெற்றது ஆகும். இது வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஐக்கிய நிகழ்வாகும். தென்னிந்தி யாவில் பல பாரம்பரியங்களைப் பின்பற்றிய திருச்சபைகள் ஒன்றாகக் கூடியமை, உலகத் திருச்சபை வரலாற்றில் மிகவும் போற்றப்பட வேண்டிய ஒன்றாகும் இவ் ஐக்கியத்திலே யாழ் ஆதீனமும் இணைந்து இருப்பது பெருமைக்குரிய விடயமாகும். 61 ஆண்டுகளாக யாழ் ஆதீனம் வட பகுதி மக்களையே பெருமளவில் உள்ளடக்கிய ஒன்றாக இருந்தது.



ஆனால் 2008 யூன் மாதம் 8ம் திகதியானது, எமது ஆதீனத்திற்கு பெரும் திருப்பு முனையான நாளாக அமையப் பெற்றுள்ளது. அன்றைய தினம் பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜாவினால் கொழும்புத் திருச்சபையில் அருட்பொழிவு வழிபாடு நடாத்தப்பட்டது. இவ்வழிபாட்டில், நாட்டின் தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய மலைநாட்டைச் சேர்ந்த இடங்களின் திருச்சபை மக்களுடன், வட பகுதியைச் சேர்ந்த மக்களும் கலந்து கொண்டமை சிறப்பான விடயமாகும். குறிப்பாக காலிப் பகுதியைச் சேர்ந்த சிங்கள மக்களும் இவ் வழிபாட்டில் கலந்து கொண்டமையின் ஊடாக, தென்னிந்தியத் திருச்சபைக் குடும்பத்தினுள், புதிய மொழி பேசுபவர்களும் இணைந்து கொண்டமை வரவேற்கப்படத்தக்க மாற்றம் எனலாம்.



அன்றைய தினம் இடம் பெற்ற அருட்பொழிவு வழிபாட்டில் பேராயரி னால் 03 பேர் உதவிக் குருக்களாகவும், 02 உதவிக்குருக்கள் குரு க்களாகவும் அருட் பொழிவு செய்யப்ப ட்டனர். இவர் களில் 03 பேர் தற்போது மீண்டும் தாய்த்திருச் சபையுடன் இணைந்து கொண் டமை குறிப்பிடத் தக்கதாகும்.



இவ்வழிபாட்டில் பெருந் தொகையான மக்கள் பங்குபற்றியதன் ஊடாக, தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனமானது தேசிய திருச்சபையாக மாற்றம் பெற்றுள்ளமை கண்கூடானது என எமது தொடர்புசாதன நபருடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டு ள்ளது. கடவுளுடைய பாதைகள் ஆச்சரிய மானவை, சில வேளைகளில் எம்மால் அவற்றை புரிந்து கொள்ள முடியாது. ஆனால் எமது நம்பிக்கையானது, மலைகளைத் தகர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். இலங்கை மக்களுக்கு இப்புதிய நம்பிக்கை தரப்படுகின்றது. தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனமானது, தேசிய திருச்சபை ஆகையால் இலங்கையில் அமைதிக்கும், இணக்கத்திற்குமான செயற்பாடுகளை முன்னெடுக்க தற்போது ஏற்ற நிலை உருவாக்கம் பெற்றுள்ளது.

2008 யூன் 08ம் திகதி உதவிக் குருக்களாக திரு. V. அன்னலிங்கம் (பண்டத்தரிப்புத் திருச்சபை), திரு. S. செல்வந்தா (பெரிய நீலாவணை, கிழக்கு மாகாணம்), திரு. P.W. நெல்சன் பரமகுமார் (கொணமுல, காலி) ஆகியோரும், குருவாக அருட்பணி P. ஜெரோம் போல் (பாலமீன்மடு, கிழக்கு மாகாணம்) அவர்கள் பேராயரால் அருட்பொழிவு செய்யப்பட்டனர்.



**கொரியன் திருச்சபையுடன் பலமுள்ள கூட்டு**



2008 ஆகஸ்ட் மாதத்தின் முதலாம், இரண்டாம் வாரங்களில் இரண்டு அருட்பணிக் குழுக்களின் விஜயம் இடம்பெற்று இருந்தன. கொரியாவில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் வருகை தந்த இவ் இரு குழுக்களின் வருகையானது எமது ஆதீனத்திற்கு பெரும் பயன் உள்ள அம்சமாக அமையப் பெற்றது. இக் குழுவினர் ஆதீனத்தின் குருமாருடனும் பொது நிலையினருடனும் கலந்துரையாடிய துடன், மலை நாட்டிற்குச் சென்று ஆதீனத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படு கின்ற பணிகளை அவதானித்ததுடன் புதிய திருச்சபை நிலையங்களைக் கட்டி எழுப்பும் முயற்சியில் அடிக் கற்களையும் நாட்டினர். மேலும் கொழும்புத் திருச்சபையில் இடம்பெற்ற விசேட வழிபாடான அருட்பொழிவு வழிபாட்டிலும் பங்கெடுத்தனர். இதனைத் தொடர்ந்து உத்தியோகபூர்வமான கலந்துரை யாடல் ஒன்று பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா அவர்களின் தலைமையில் "KORIND MISSION" அன்பர்களுடன் இடம்பெற்றது. இதில் ஆதீனத்தின் எதிர்கால திட்டம் குறித்து ஆராயப்பட்டது. இக் கலந்துரையாடலில் திருச்சபையின் பொதுநிலைத் தலைவர்களும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

"KORIND MISSION" குழுவில் அதன் ஸ்தாபகர் Rev. Dr. Lee Il Ho அவர்களுடன் Mrs. Lee Il Ho, Rev. Dr. Him Kyong Kon ஆகியோர் உள்ளடங்கிய குழுவினரும், இந்தியக் குழுவைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் Rev. B. D. Prasad Rao, Mrs. Lily Prasad, Mr. Rajasingh, Mr. Silvanes ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

2008 ஆகஸ்ட் மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் ''நற்செய்தியும், அருட்பணியும்'' என்ற தலைப்பில் ஓர் மகாநாடு, 39, பசல்ஸ் ஒழுங்கையில் உள்ள ஆதீன திருச்சபை இல்லக் கேட்போர் கூடத்தில் குருமார்களு க்கும், பொதுநிலையினருக்கும் ஆக நடாத்தப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள் அமர்விலே குருமார், உதவிக்குரு மார், நற்செய்தி அறிவிப்பாளர்கள், பொதுநிலையினர் என ஐம்பதிற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதற்கு தலைமை தாங்கிய எமது பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா அவர்கள் ஆரம்ப தியானத்திற்கு மத்தேயு நற்செய்தியை ஆதாரமாகக் கொண்டு கருத்துக்களை வழங்கினார். அழைப்பையும், அருட்பணியையும் நெருக்கடியில் உள்ள சமூகத்திற்கு வழிகாட்டுவதற்கு ஏற்ற முறைகள் மத்தேயு நற்செய்தியில் சிறப்பிடம் பெற்று இருப்பது வலியுறுத்தப்பட்டது.

"KORIND MISSION" அமைப்பின் ஸ்தாபகர் Dr. Lee Il Ho அவர்கள் ''நலமுள்ள திருச்சபையாக எவ்வாறு மாற்றம் பெறுவது'' என்ற பொருளில் மூன்று விரிவுரைகளை நடாத்தினார். இவரது விரிவுரையின் சாரமாக - எப்போதும் திருச்சபை வளர்ந்து கொண்டே செல்ல வேண்டும். அப்போது அது திறமையுடைய விழப்பான நலமுள்ள / முழுமையான திருச்சபையாகவும் அது கனி கொடுக்கும் தன்மை மிகுந்ததாகவும் காணப்படும் என்று தெளிவுபடுத்தினார்.

### கடவுளுடைய புதிய திராட்சைத் தோட்டத்திற்காக புதிய பணியாட்கள்



எமது ஆதீனமானது, அண்மைய மாதங்களில் சமுதாயத்தில் மிகவும் அடிமட்ட நிலையில் உள்ள, மக்களின் தேவையை சந்தித்து, அபிவிருத்தி செய்யும் சில திட்டங்களில், தனிக்கவனம் செலுத்தி வருகிறது. நாட்டில் நடைபெற்று வரும் சிவில் யுத்தத்தினால், பாதிக்கப்பட்ட மக்கள், சொத்தை, வாழ்வை இழந்தவர்கள், 2004ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் தனது பணியை முன்னெடுத்துச் செல்கின்றது. அத்துடன் அம்மக்களின் ஆன்மீகம் சார்ந்த விடயத்திலும் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக அம்மக்களுடைய விசுவாசத்திற்கு அருட்பணியினூடாக வழிகாட்டுவதும், ஆற்றுப்படுத்துநராக ஒரு முழு செயற்பாட்டை செய்வதும் திருச்சபையால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இத்தகு சவால் நிறைந்த சூழ்நிலையில் பின்வருவோர் புதிய பணியாட்களாகத் தம்மை ஒப்புக்கொடுத்துள்ளனர். அருட்புணி R. ஜோய் பிரதீப்குமார் அருட்பொழிவு செய்யப்பட்டார். நற்செய்தியாளர்களாக, செல்லதம்பி கமலஹாசன், சிங்காரரத்தினம் சத்தியதாசன் ஆகியோர் பண்டாரவளையிலும், வாழைச்சேனை வாகரையிலும், அம்பாறை அக்கறைப்பற்றிலும் பணி செய்கின்றனர். இவர்களின் அருட்பொழிவு வழிபாடானது, பேராயர் அறிவர் S. டானியல் தியாகராஜா அவர்களினால் 2008 யூலை 6ம் திகதி கொழும்பு திருச்சபையில் நடாத்தப்பட்டது.

உம்மை ஆராதிக்க
உம் ஆலயத்தில் நாம்
காத்திருந்தோம் பல
காலங்களாய்

## திருச்சபை மக்களின் மகிழ்ச்சி

### அச்சுவேலி திருச்சபை




### பண்டத்தரிப்பு திருச்சபை



பண்டத்தரிப்பு, அச்சுவேலி ஆகிய இரு சபைகளும் கடந்த சில காலங்களாக பல நெருக்கடி களைச் சந்தித்து வந்தன. வழிபாட்டுச் சூழல் ஏற்ற முறையில் அமையப்பெறாது, சிலரது தவறான செயற்பாடு களினால் அமைதி அற்றுக் காணப்பட்டது. அண்மை நாட் களில் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இரு சபைகளும் அமைதியான முறையில் வழிபாட்டிற்கு ஏற்ற சூழலில் மாற்றம் பெற்றமை ஆனது முக்கிய நிகழ்வு ஆகும்.

இதனால் இவ் இரு சபைகளையும் சேர்ந்த மக்களின் மகிழ்ச்சி கட்டுக்கடங்காது இருப்பதை காணக் கூடியதாக உள்ளது. தற்போது இவ் இரு சபைகளும் தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் நெறி முறைகளுக்கு கீழ் ஒழுங்கான முறையில் கடவுளின் பணியில் ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



### பிள்ளைகள் விழா



இவ்வாண்டு பிள்ளைகள் விழா ஆனது செப்ரெம்பர் 13ம் திகதி சனிக்கிழமை முழுநாள் நிகழ்வாக பண்டத்தரிப்பு தென்னிந்திய திருச்சபையில் இடம்பெற்றது. 26 திருச்சபைகளில் இருந்து இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பங்குபற்றியமையானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும்.

காலை வழிபாட்டின் போது யாழ் ஆதீனத்தில் பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா அவர்கள் ''கடவுளிடம் திரும்புங்கள்'' என்ற பொருளில் அருளுரை ஆற்றினார். இதுவே இம்முறை இடம்பெற்ற பிள்ளைகள் விழாவிற்கான மகுட வாக்கியம் ஆகும். வழிபாட்டைத் தொடர்ந்து மிகவும் நீண்டதான சாட்சிப் பவனி இடம்பெற்றது. இதில் பாரம்பரிய நாதஸ்வரம், தவில் என்பன இப் பவனியை மெருகூட்டுவதாக அமையப் பெற்றது. இப் பவனியில் சிறுவர்கள், சபையினர், குருமார்கள் பங்கேற்றனர். யாழ்குடாநாட்டில் போரின் நெருக்கடி காணப்பட்டபோதும் இவ்விதமான பவனி ஆனது புதிய செய்தியைக் கொடுப்பதாய் விளங்கியது.



சாட்சிப் பவனியைத் தொடர்ந்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் பிள்ளைகளுக்கான போட்டி நிகழ்வுகள் ஆரம்பமானது. பல சபைகளையும் சேர்ந்த பிள்ளைகள் புத்தெழுச்சியுடன் நிகழ்வுகளில் பங்குபற்றியமை சிறப்புக்குரிய தாகும். அனைவருக்கும் ஐக்கிய மதிய உணவு வழங்கப்பட்டது.



தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் புதிய தலைமைத்துவம் ஆனது எதிர்கால சந்ததிக்கு உரிய முறையில் வழிகாட்டும் என்பதற்கு இவ்வாண்டு இடம்பெற்ற பிள்ளைகள் விழாவானது ஓர் எடுத்துக்காட்டு ஆகும். இப் பிள்ளைகள் விழாவின் போது யாழ் ஆதீனத்தின் இளைப்பாறிய பேராயர் அறிவர் S. ஜெபநேசன், மெதடிஸ்த திருச்சபையின் பதில் தலைவர் திரு M. A. சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டத்தரிப்பு திருச்சபையானது மிகவும் நீண்ட வரலாற்றை உடைய ஒரு பழம் பெரும் திருச்சபை. மிஷனரிமாரினால் 1832ம் ஆண்டு பணிகள் ஆரம்பிக்கப் பட்டது. அத்துடன் திருச்சபைக்கு அருகாமையில் உள்ள பெண்கள் பாடசாலையும் மிஷனரிமாரினால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இவ்வாறான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் நடாத்தப்பட்ட பிள்ளைகள் விழாவானது காலத்தின் பதிவாக பதியப்பட்டு உள்ளது.


**யாழ் நகர்ப்பணி திருச்சபை**





செப்ரெம்பர் 27ம் திகதி ஆனது தென்னிந்திய திருச்சபை நாளாகும். 2008ம் ஆண்டு இதே நாள் யாழ் நகர்ப்பணித் திருச்சபையானது ஒழுங்கு முறைப்படி மீண்டும் தாய்த் திருச்சபையான தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்திடம் அருட்பணி E. N. லோறன்ஸ் அவர்களினால் ஒப்படைக்கப்பட்டது. சில மாதங்களாக இச் சபையானது கலகம் செய்வோரினால் தாய்த் திருச்சபையில் இருந்து பிளவுபடுத்தப்பட்டு இருந்தது. தற்போது அமைதியான முறையில் வழிபடக் கூடிய ஒரு சூழல் ஏற்பட்டமையானது சபையினருக்கு கிடைத்த பெரும் ஆசீர்வாதம் என்பதுடன் ''ஒரே உண்மை தான்'' என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தற்போது அருட்பணி E. N. லோறன்ஸ் அவர்கள் ஆனைக் கோட்டைத் திருச்சபைக்கு அருட்பணியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**நெடுந்தீவில் யாழ் ஆதீனத்தின் பணிகள்**





தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம் ஆனது நெடுந்தீவில் நீண்ட தும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமான சேவையை அத் தீவு மக்களுக்கு வழங்கி வருகின்றது. பெரிய ஏழு தீவுகளில் ஒரு தீவாக விளங்குவது நெடுந்தீவு ஆகும். நெடுந்தீவு மக்கள் விவசாயத்துறையில் பேர் பெற்று விளங்குபவர்கள். தமது உணவுத் தேவையைத் தாமே நிறைவு செய்யும் வகையில் மக்களது உழைப்புக் காணப்படுவது பாராட்ட வேண்டியது ஆகும். அண்மையில் பேராயர் அறிவர் டானியல் S.தியாகராஜா அவர்களது தலைமையில் குழு ஒன்று நெடுந்தீவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தது. அவ் விஜயத்தின் போது பேராயர் அவர்கள் நெடுந்தீவு மக்களுடன் ஒரு சந்திப்பை நடாத்தி பல விடயங்கள் குறித்தும் கலந்துரை யாடினார். இதன்போது முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய பல அபிவிரு த்தித் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டன.



ஒரு முழுமையான அபிவிருத்தியை நோக்கியதான பயணத்திலே கல்வியே தான் அதனது இலக்கை நோக்கி வழிநடத்துவதை, வலியுறுத்திய பேராயர் அவர்கள் கல்வியை மையமாகக் கொண்டு பல செயற்பாடுகளை முன்னெடுப்பதன் அவசியத்தை வற்புறுத்தினார்.

உலகளாவிய ரீதியில் தொடர்புகள் சிறப்பான முறையில் அமைய பெறுவதற்கு கணனி அறிவும், அதற்கு ஏற்றால் போல் ஆங்கில அறிவும் மிகவும் அவசியம். அப்போது தான் எமது சமூகம் வலுவுள்ள ஒன்றாக அமையப்பெறும் என்பதைத் தெளிவுபடுத்திய பேராயர், அதற்கு ஏற்றாற் போலத்தான் தென்னிந்திய திருச்சபையானது நெடுந்தீவில் கல்விப் பணியை பல்வேறு கோணங்களில் முன்னெடுப்பதாகக் கூறினார்.



நெடுந்தீவில் சிறுவர் பகற் பராமரிப்பு ஊடாக 160 சிறார்களின் தேவைகள் சந்திக்கப்பட்டு வருகின்றது. தொழிற்பயிற்சி மையமாக இயங்கும் கணனிக் கற்கை நெறியின் ஊடாக பல இளம் வாலிப உள்ளங்கள் பயன்பெறுகின்றனர். மாலை நேர இலவச கல்வி வகுப்புக்கள் இடம்பெறுகின்றன. அதே போன்று இலவச ஆங்கில வகுப்புக்களும் நடாத்தப்படுகின்றன. இவ்வாறு நெடுந்தீவில் கல்வியின் ஊடாக பெரும் மாற்றத்தை உண்டு பண்ணும் வகையில் பெரும் அளவிலான சமூகப் பணி இடம்பெறுவது எதிர்கால சமூகம் ஆனது தன்னிறைவு பெற்ற ஒன்றாக அமைய வேண்டும் என்பதற்காகவே தான். இதுவே தென்னிந்திய திருச்சபையினதும் தூர தரிசனப் பார்வை ஆகும்.



## தலைமைத்துவப் பயிற்சி



நமது ஆதீனத்தால் நடாத்தப்படும் ஆண்கள், பெண்கள், இல்லப் பிள்ளைகளுக்கான ஒரு தலைமைத்துவ பயிற்சியானது, 2008 மே 18ம் திகதி தொடக்கம், 20ம் திகதி வரை வட்டுக்கோட்டையில் நடாத்தப்பட்டது. இப்பயிற்சி நெறியை எமது பேராயர் அம்மா கலாநிதி (திருமதி) தயா தியாகராஜா அவர்கள் நடாத்தியமை சிறப்புக்குரியதாகும். நிகழ்விற்கான உதவிகளை இல்லப்பாதுகாவலர்கள் முன்னின்று வழங்கினர். இப்பயிற்சியை இல்லங்களின் பொது முகாமையாளர், திரு. A. C. பிரான்ஸிஸ் அவர்கள் ஒழுங்குபடுத்தி இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லிலும் செயலே மேலானது



அருட்பணி A. C. மதனராஜா அவர்கள் ஜேர்மனியில் தனது ஓய்வை அடுத்து, இலங்கை மக்களுக்குத் தான் பணியாற்ற வேண்டும் என அறிவித்தல் விடுத்ததோடு, பணியாற்றுவதற்காகவும் வருகை தந்துள்ளார். அவரது வருகையானது, தென்னிந்தியத் திருச்சபையாலும் இலங்கை மக்களினாலும் மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இவரது வருகை குறித்து கருத்து தெரிவித்த, பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா அவர்கள், இந்த சூழ்நிலையில் தேவைகள் உள்ள எமது சமுதாயத்திற்கு அருட்பணி மதனராஜாக்களைப் போல, அனுபவமும் ஆன்மீக அறிவும் உள்ள தலைவர்கள் கிடைப்பது ஏற்புடையதாக அமையும் என்றார்.



Bavariaல் உள்ள, லூர்த்தான் திருச்சபையின் மேய்ப்புப்பணியானது, 29.07.2008ம் திகதி, அருட்கலாநிதி A.C. மதனராஜா அவர்களிற்கு, அவர் ஓய்வு பெறுவதை ஒட்டி பிரிவுபசார நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

மேலும் அவரைப் பாராட்டும் முகமாக, உயர்ந்த விருதான தங்கமுடி சிலுவையை வழங்கி அவரது சேவையைப் பெரிதும் பாராட்டியது குறிப்பிடத்தக்கதாகும். எமது தாய்த்திருச்சபைக்கு அருட்கலாநிதி A. C. மதனராஜா அவர்களை அன்புடன் வரவேற்கிறோம். தென்னிந்திய திருச்சபையில் ஒரு மிஷனரியாக இருப்பதற்கான அழைப்பை அவர் ஏற்றுள்ளார். ஆதீனத்தின் செயற்குழுவானது அவரைக் கொழும்பில் தங்கி இருந்து, ஒன்றிப்பு உறவின் இயக்குனராக, (Director of Ecumenical Relation) பணியாற்றுமாறு தீர்மானித்துள்ளது. அத்தோடு கொழும்பு பிராந்தியக் குருவாகவும் செயற்படுமாறு கூறியுள்ளது. தென்னிந்திய திருச்சபைக்காக, மிஷனரியாக இருப்பதற்கு, அவர் ஏற்றுக் கொண்டதனை நாம் அனைவரும் சிறப்பான ஒரு செயல் என நம்புகின்றோம். இவர் 2008 செப்ரெம்பரில் இருந்து தனது பணியை ஆரம்பித்துள்ளார்.

## பேராயருக்கு அவுஸ்திரேலியாவில் அன்பான வரவேற்புக் காத்திருக்கிறது

அவுஸ்திரேலியா Uniting Church ஆனது 2008 நவம்பர் மாதம் 23ம் திகதி அன்று இடம்பெறவுள்ள ஒளி ஞாயிறின் பண்டிகைக்கு பங்குபற்றுமாறு அன்பான அழைப்பை எமது பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா அவர்களுக்கு விடுத்துள்ளது. அவுஸ்திரேலிய விக்ரோறிய மாகாணத்தில் உள்ள திருச்சபையினாலும், அதனுடைய இணையத்தளத்தினாலும் மேற்குறித்த நிகழ்வுக்கான ஆயத்தங்கள் ஒழுங்குபடுத்தப் படுகின்றன. எமது பேராயருக்கான அழைப்பை Creative Ministries Network இன் உடைய இயக்குனர் John Bottomley அவர்களும், அருட்பணி அன்ஜெலா தம்பியப்பா அவர்களும் இணைந்து வெளியிட்டுள்ளனர். அருட்பணி அன்ஜெலா தம்பியப்பா அவர்கள் யாழ் ஆதீனத்தின் முதலாவது அருட்பொழிவு பெற்ற பெண் அருட்பணியாளர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இவர் St. George's Church of the Uniting Church of Australia ற்கு பொறுப்பு வாய்ந்த ஒரு அருட்பணியாளர் ஆகப் பணியாற்றுகின்றார்.

யாழ் ஆதீனத்தில் இவர் பணியாற்றிய போது சவால் நிறைந்த இடங்களான சத்தியபுரம், சண்டிலிப்பாய், தேவகிராமம் போன்ற இடங்களில் பாரிய மாற்றங்களை உண்டு பண்ணியதுடன் பலரைக் கடவுளின் பாதையில் வழிநடத்தினார்.

பேராயரின் அவுஸ்திரேலியாவிற்கான விஜயம் ஆனது பல முன்னேற்றகரமான செயற்திட்டங்களை உண்டுபண்ணும் என்பது நம்பிக்கைக்குரிய ஒரு விடயமாகும். அத்தோடு யாழ் ஆதீனத்தைச் சேர்ந்தவர்கள், யாழ்ப்பாணக் கல்லூரியில் பழைய மாணவர்கள் பலரும் அவுஸ்திரேலியாவில் வாழ்வது நாமறிந்த உண்மையாகும். பேராயருடைய விஜயத்தின் போது இவர்களுடனான சந்திப்புகளும், கலந்துரையாடல்களும் இடம்பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. பேராயர் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுனர் சபையின் பொதுச் செயலாளராக நடப்பாண்டு செயற்படுவதனால் அவுஸ்திரேலியாவின் பல மாகாணங்களிலும் வாழும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு உண்டு. யாழ் ஆதீனத்தைச் சேர்ந்த பலரும் தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருவதனால் இலங்கையில் உள்ள தமது மக்களுக்கு பலதரப்பட்ட உதவிகளையும், அவர்கள்




## பேராயரின் உடுப்பிட்டித் திருச்சபை விஜயம்

உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபைக்கு, பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா அவர்கள் 2008 மே மாதம் 26ம் திகதி விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இவருடன் ஆதீனத்தின் செயலாளர் அருட்பணி I. இராஜ்குமார், பொருளாளர் திரு. A. அருள்யோசேப், ஓய்வூதியப் பொருளாளரும் சொத்துடமை அலுவலரு மாகிய திரு. S.R. யேசுபாலன், மற்றும் உடுப்பிட்டித் திருச்சபையின் புதிய ஊழியன் அருட்பணி K. S. யோசேப் ஆகியோரும் உடன் சென்றனர். இத் திருச்சபையில் இதுவரை ஊழியம் செய்த அருட்பணி V. N. தர்மகுலசிங்கம் அவர்கள் 2008 மே மாதம் 21ம் திகதி ஓய்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


திருச்சபையின் முது பெரும் தலைவர்களுடன் கூட்டம் நடாத்திய பேராயர் அவர்கள், மேற்கொண்டு செய்ய வேண்டிய திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார். குறிப்பாக பேராயரின் தாயாரான லிடியா செல்லம்மா தியாகராஜா அவர்கள் உடுப்பிட்டியில் பிறந்தார் என்பதனால் அவரின் ஞாபகார்த்தமாக பேராயரின் குடும்பத்தவர்கள் சார்பில் உடுப்பிடித் திருச்சபைக்கு வர்ணம் பூசி மெருகூட்டல் செய்து தருவதாக ஒப்புதல் கொடுத்தார். பேராயரின் இம் முயற்சி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். அத்துடன் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பெண்கள் பாடசாலையின் அதிபர் திருமதி. R. குட்டித்தம்பி, உபஅதிபர் செல்வி ராஜரட்ணம் ஆகியோருடனும் பேராயர் கலந்துரையாடினார். அப்பிரதேசத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பெண்கள் பாடசாலை நீண்ட காலம் கை கொடுத்து வருவது பலரும் அறிந்த பெருண்மையாகும்.

## மீள் நெருக்கடி நிலையை எதிர்கொள்ளும் சமூகத்திற்கான தொழில்நுட்ப கல்வி




யாழ் குடாநாட்டு மக்களுக்கு யாழ்ப்பாணக் கல்லூரியின் பெரிதான திட்டங்களில் யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனமும், யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாய நிறுவனமும் கடந்த மூன்று சகாப்த காலமாக தொழிற்துறை கல்வி ரீதியான மகத்தான பணிகளை செயற்படுத்தி வருகின்றது.

கலாநிதி லூதர் ஜெயசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் தலைவரான பின்பு மேற்குறித்த துறைகளில் முன்னேற்றம் காணத் தொடங்கியதும் எமது மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய முறையில் இத் செயற்பாடானது இவ் இரு நிறுவனங்களின் ஊடாக முன்னெடுத்துச் செல்லப்படுவது பாராட்டுக் குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 யூலை மாதம் 4ம் திகதி அன்று இவ் இரு நிறுவனங்களினதும் - ''நிறுவன நாள்'' ஆனது மிகவும் கோலாகலமான வகையில் யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு சிரேஷ்ட சட்டத்தரணியான திரு. M.A. சுமந்திரன் B.Sc, LLB அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இவர் இலங்கை தேசிய கிறிஸ்தவ சங்கத்தின் அமைதிக்கும், நீதிக்குமான ஆணைக்குழுவின் தலைவராகவும் உள்ளார். இவருடைய மனைவி திருமதி சாவித்திரி சுமந்திரன் அவர்கள் முகாமைத்துவத்தில் ஆலோசகராகவும், கணக்காளராகவும் தொழில்புரிகின்றார். இரு நிறுவனங்களிலும் கற்று அரங்கேறிய மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ்களையும், பரிசில்களையும் திருமதி சாவித்திரி சுமந்திரன் அவர்களே வழங்கினார்.

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குனராக திரு. N.R.G. கூல் அவர்களும், விவசாய நிறுவனத்தின் அதிபராக திரு. K. குகதாசன் அவர்களும் பணியாற்றுகின்றனர். இவ் இரு நிறுவனங்களின் கவுன்சில் தலைவராக திரு. N.A. விமலேந்திரன் அவர்களும், யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுனர் சபைத் தலைவராக பேராயர் S. ஜெபநேசன் அவர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---


### உளவளவாளர் பயிற்சிப் பட்டறை
### (Counselling Programme)

யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தினால் தெரிவு செய்யப்பட்ட 25 வாலிப உள்ளங்களுக்கான உளவளவாளர் பயிற்சிப்பட்டறையானது 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி தொடக்கம் 23ம் திகதி வரை நடாத்தப்பட்டது. இதன் தொடராகவும், பங்கு கொண்ட பயிற்சியாளர்களின் முன்னேற்றத்திற்காகவும் விடயஆய்வுப் (Case Study) பயிற்சியானது 2008ம் ஆண்டு மே மாதம் 24ம், 25ம், 31ம் திகதிகளிலும், யூன் மாதம் 1ம், 7ம், 8ம் திகதிகளிலும் யாழ் பல்கலைக்கழக சிற்றாலயத்தில் நடாத்தப்பட்டது. உளவளவாளர்கள் எவ்வாறு ஒரு சிறந்த ஆளுமை உள்ளவராக இருக்க வேண்டும் எனவும், எவ்வாறு பிரச்சனைகளை இனங்காண்பது என்றும், மனவடு தொடர்பான ஆழமான விளக்கங்களும், பல்வேறு உளவியல் சிந்தனைகளும் குறித்து பல சான்றுகளுடன் இவ் பயிற்சிப் பட்டறையானது நடாத்தப்பட்டதுடன் விடய ஆய்வை (Case Study) எவ்வாறு மேற்கொள்வது, அதற்கு வேண்டப்பட்ட முறைகள் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இப் பயிற்சிப் பட்டறையின் வள ஆளணியர் களாக பேராயர் அம்மா கலாநிதி (திருமதி) தயா தியாகராஜா, திரு. N.A. விமலேந்திரன், அருட்பணி V. பத்மதயாளன், திரு. P. அருமைத்துரை, திருமதி கிருபா பத்மதனேஸ்வரன், திருமதி சிறோமி லியோனாட் ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ் குடாநாடானது போரினாலும், சுனாமிப் பேரழிவினாலும் பல்வேறு சுமைகளை சுமந்து வாழும் மக்களுக்கு இப்பேற்பட்ட பயிற்சிப் பட்டறையின் ஊடாக கலந்து கொண்டவர்கள், மக்களின் வாழ்வில் புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்துவார்கள் என்பது திண்ணம். இப் பயிற்சிப் பட்டறையின் இணைப்பாளராக யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் செயலாளர் அருட்பணி V. பத்மதயாளன் அவர்கள் செயற்பட்டார்.

### வாழ்வும், தண்ணீரும் பாதுகாப்புத் திட்டம்



எமது ஆதீனத்தின் பணியானது, சமூக மயப்படுத்தப்பட்டதன் ஒரு வெளிப்பாடாக, ''சுத்திகரிக்கப்பட்ட நீர் விநியோகத் திட்டம்'' 2008 யூன் மாதம் 17ம் திகதி கொழும்பு தென்னிந்திய திருச்சபை நிலையத்தில் பேராயர் அறிபர் டானியல் S. தியாகராஜா அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. "Water Missions International" அமைப்பே இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உரிய ஆலோசனையையும் வழிகாட்டலையும் வழங்கி இருந்தன. இத் திட்டத்தின் ஊடாக எமது பிரதேசங்களில் உள்ள தண்ணீரைக் கொண்டே இத்தகைய செயற்பாட்டின் ஊடாக உரிய பயனைப் பெற முடியும் என்பது உறுதியாகின்றது.

> சத்திய வேதத்தை சாற்றிடுவோம்
> சாட்சிகளாய் என்றும் ஜீவித்திட
> சத்துருவை என்றும் ஜெயித்திடுவோம்
> சிற்பிகளாய் அவர் ஆலயத்தில்

### கிறிஸ்தவ பாடக் கருத்தரங்கு

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீன சமயக் கல்விக்குழுவின் பரீட்சைகள் பிரிவினால் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான கிறிஸ்தவ பாடக் கருத்தரங்கானது 2008 யூன் மாதம் 28ம், 29ம் திகதிகளிலும், யூலை மாதம் 5ம், 6ம், 12ம், 13ம் திகதிகளிலும் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவில் இடம்பெற்றது.



பாடத்திட்டத்தை உள்ளடக்கியதான பாடக் குறிப்பை மையப்படுத்தி கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டதுடன் பங்கு கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் இலவச பாடக்குறிப்புக்கள் வழங்கப்பட்டன. இக் கருத்தரங்கை யாழ் புனித பத்திராசிரியர் கல்லூரி ஆசிரியை திருமதி மல்லிகா ஜோன் அரியதாஸ், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியை திருமதி சுனிதா வெனான்சியஸ், யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. பீ. தேவராஜா யாழ் பல்கலைக்கழக சிற்றாயக் குரு அருட்பணி V. பதிமதயாளன் ஆகியோர் முன்னின்று நடாத்தினார்கள். இக் கருத்தரங்கில் எண்பதிற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தலைமைத்துவப் பாசறை

யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் அனுசரணையுடன் தென்னிந்திய திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, இலங்கை திருச்சபை, இரட்சணிய சேனை திருச்சபை ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 60 வாலிபர்களை உள்ளடக்கியதான ஓர் தலைமைத்துவப் பாசறையானது 2008 யூலை மாதம் 12ம், 13ம் திகதிகளில் வட்டுக்கோட்டை லீவை ஸ்போல்டிங் ஆண்கள் இல்லத்தில் இடம்பெற்றது. ஆரம்ப வழிபாடானது வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் அருட்பணி D.S. சொலமன் அவர்களினால் நடாத்தப்பட்டது. ''வாழ்வை வடிவமைப்போம்'' என்ற கருப்பொருளில் இப்பாசறையின் அனைத்து நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. கருப்பொருளின் உரையினை தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா அவர்கள் திருமறை சார்ந்தும், சமூகம் சார்ந்தும் வாலிய உள்ளங்களுக்கு ஏற்ற முறையில் அறைகூவல் மிகுந்த முறையில் கருத்துரை வழங்கினார். இப் பாசறையின் ஏனைய வள ஆளணியர்களாக யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் திரு. N.A. விமலேந்திரன், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் திரு. R.T. ஜெயசீலன், யாழ் பல்கலைக்கழக சிற்றாலயக் குரு அருட்பணி V. பத்மதயாளன், தொல்புரம் மெதடிஸ்த திருச்சபை அருட்பணியாளர் அருட்பணி டெய்சி தேவகுமார் ஆகியோர் பங்கேற்று கருத்துரைகளை வழங்கினர்.





பாசறையில் பாடல்கள், விளையாட்டுக்கள், திறனாய்வு, குழுநிலை கலந்துரையாடல், என்பனவும் இடம்பெற்றன. இப் பாசறையினை யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் செயலாளர் அருட்பணி V. பத்மதயாளன் அவர்களும், ஒன்றியத்தின் வாலிபர் பகுதி உதவி இணைப்பாளர் திரு. K. உமாதரன் அவர்களும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தனர். இப் பாசறையில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இவ்வாறான பாசறைகளினால் எதிர்காலத் தலைவர்கள் உருவாக்கப்படுவதுடன் ஒவ்வொரு திருச்சபையையும் சேர்ந்தவர்கள் பிற திருச்சபை வாலிபர்களுடன் ஐக்கியப்பட ஏற்ற ஒன்றாக அமையும் என்பது நம்பிக்கைக்குரியது.

### நந்தியால் ஆதீனக் குருமாருக்கும் அவர்கள் மனைவியருக்குமான ஞான ஒடுக்கம்

கொடைக்கானில் உள்ள தென்னிந்திய திருச்சபை ஞான ஒடுக்க நிலையத்தில், நந்தியால் ஆதீனக் குருமாருக்கும், மனைவியர்களுக்குமான மூன்று நாள் ஞான ஒடுக்கமானது, 2008 மே மாம் 13ல் இருந்து 16 வரை நடைபெற்றது. இதனை நந்தியால் ஆதீனப் பேராயர் அறிவர் P. J. லோறன்ஸ் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். எமது பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும், கர்நாடக மத்திய ஆதீனத்தின் பேராயர் S. வசந்தகுமார் அவர்களும் இவ் ஞான ஒடுக்கத்தின் தலைவர்களாகக் கலந்து கொண்டனர்.



### களுவாஞ்சிக்குடி மக்கள் பேராயருடன் சந்திப்பு

களுவாஞ்சிக்குடி ஒன்தாச்சி மடத்தைச் சேர்ந்த திருச்சபை மக்கள், பேராயர் அறிவர் டானியல் S. தியாகராஜாவைச் சந்தித்து உரையாடினர். இச் சந்திப்பானது மிகவும் பயனுள்ளதாக அமையப் பெற்றது. சந்திப்பின் பின்னர் அம்மக்களுடன் பேராயர் காலை ஐக்கிய உணவில் கலந்து கொண்டார்.

"ஆபிரகாமுக்கு கடவுள் நண்பராகத் திகழ்ந்தார்
ஈசாக்குக்கு அவர் அச்சமூட்டுபவராக அமைந்தார்
யாப்போக்கில் யாக்கோபு கடவுளைச் சந்திக்கும்வரை
அவர் அவருக்கு வெறும் நினைவாகவே நின்றார்.
நாம் நாமே கடவுளைச் சந்திக்க வேண்டும்."
- ஸ்டான்லி ஜோன்ஸ்.

### வண.கலாநிதி ஜெபமோகன் ஜெபரட்ணம்



அங்கிலிக்கன் திருச்சபையை சேர்ந்த வண. கலாநிதி ஜெபமோகன் ஜெபரட்ணம் தனது கலாநிதி பட்டத்தை நிறைவு செய்து கொண்டமையை பாராட்டும் முகமாக யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம் அவரை கௌரவிக்கும் விழாவினை ஒழுங்கு செய்தது இதில் பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா மெதடிஸ்த திருச்சபையை சேர்ந்த வண..கதிர்காமரும் யாழ்பாண கிறிஸ்தவ ஒன்றியத்துடன் தொடர்புடைய பலரும் கலந்து கொண்டனர்.



வண.கலாநிதி ஜெபரெட்ணம் யாழ்பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக பணியாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மூளாய் தென்னிந்திய திருச்சபை



மூளாய் தென்னிந்திய திருச்சபை சுவிசேட பணியிலும் ஆன்மீகத்திலும் சமூகப்பணியிலும் மிகவும் உற்சாகமாக செயல்பட்டு வருகின்றது சபை மக்கள் பொதுவாக முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.



தொழுநோயாளர் மத்தியில் இவர்கள் செய்யும் பணி மிகவும் பாராட்டத்தக்கது.

### மலையகத்தில் சுவிசேடபணி



ஏறத்தாள 15ஆண்டுகட்கு முன் நுவரேலியவில் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபையும் ஆண்களுக்கான பெண்களுக்கான இல்லங்களும் வளர்ச்சி அடைந்து தற்பொழுது பல்வேறு இடங்களில் இது வியாபித்து உள்ளது ஹட்டனில் நன்நம்பிக்கை இல்லம், ஹட்டன், நுவரேலியா, கொட்டகல, ராகல, பண்டாரவளை, உடப்புசல்லாவ உட்பட பதினெட்டு இடங்களில் தென்னிந்திய திருச்சபை பரந்துள்ளது.



ஆலயம் கட்டுவதற்கான அடிக்கல், லபுக்கல, உடப்புசலாவ, கொட்டகல எனும் இடங்களில் அண்மையில் கொரிந் திருச்சபைகளின் உதவியுடன் நாட்டப்பட்டன. ஹட்டன் நன்நம்பிக்கை இல்ல திருச்சபையில் 200க்கும் மேலான பிள்ளைகள் ஓய்வுநாள் [illegible] அவர்கட்கு [illegible] வழங்கப்படுகின்றது.







### பள்ளைகளின் கல்வித் தேவை மீது திருச்சபை கவனம் செலுத்துகிறது




தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் பணிகள் தற்போது மலை நாட்டுப் பகுதியில் மிகவும் பரந்து பட்ட விதத்தில் விரிவாக்கம் பெற்று வருகிறது. குறிப்பாக ஹட்டன் திருச்சபையானது, அப்பகுதியில் 02 பிரிவுகளாக தம் பணியைத் தொடர்கிறது. அதில் ஒன்று கொட்டகலை, மற்றையது Strathdon. இத் திருச்சபையின் மிகவும் முக்கியமான ஒப்படைப்பு யாதெனில், அப்பகுதியைச் சேர்ந்த 150 சிறார்களுக்கு என முன்பள்ளியையும், ஞாயிறு பாடசாலையையும் நடாத்துவதாகும். பிரதி ஞாயிறு வழிபாட்டைத் தொடர்ந்து, அனைவருக்கும் ஐக்கிய மதிய உணவு வழங்கப்படுவதுடன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும். விசேடமாக தனிப்பட்ட முறையில் நிதிஉதவி வழங்கிவரும் அருட்பணி J. G. தியாகராஜா அவர்களுக்கு எமது விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இவருடைய பணி தொடர உதயதாரகை ஆண்டவரின் துணை வேண்டி இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றது.

### காலியில் தென்னிந்திய திருச்சபை

காலியில் சிங்கள திருச்சபை வண. எஸ். அரியறட்ணம் தலைமையில் கிரமமாக இரண்டு இடங்களில் நடைபெற்று வருகின்றது இதில் வண.பாலக்குமாரும், அவருடன் அவர் மனைவியும் சுவிசேட பணியில் ஈடுபட்டுவருகின்றனர். இதுவே தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் முதலாவது சிங்கள திருச்சபை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது கதை இது



"நீ பிறந்த காலம் போர் பிரித்தது குடும்பத்தை"
திட்டி தீர்த்து அலட்டுவாள் ஆச்சி.
குண்டு பொழியும் கிபிர், உடலை சிதரடிக்கும் செல்லடி.
தொலைத்து விட்டேன் அம்மா, அப்பாவை வன்னியில்

ஓடி விளையாடாதே பாப்பா
கண்ணிவெடி காத்திருக்கும் பாப்பா
ஒரு நேர சாப்பாடு தருவாளே பாப்பா
அது ஒவ்வொரு நாளும் ஆச்சியின் வெறும் கஞ்சி.

ஒருநாள் காணாமல் போன என் மச்சான்
அடுத்தநாள் கண்ட துண்டமாய் கிடந்தான்
என்ன நடத்தது என்று சொல்லுவார் இல்லை
ஓ வென்று அழவும் எனக்கு நாதியுமில்லை.


காகித ஓடம் விட எனக்கு ஆசை
சோ வென்று மழைகொட்டும் போதே ஆசை
அ, ஆ, எழுத கொப்பி ஒன்றும் இல்லை
ஓடம் விடமட்டும் காகிதம் கையில் எங்கே

"செக் பொயின்ட்" கடக்க அண்ணாமார்க்கு நான் தேவை!
உள்ளே மனம் பதறும் வெளியே முகம் சிரிக்கும்.
"சொந்தமகன்" "காக்கி" முன்கொட்டும் பாசம்
'செக் பொயின்ட் கடந்ததும்" நீ யாரோ: நான் யாரோ"

அன்பு பாசம் வேண்டும் எனக்கு
தொலைந்த குடும்பம் வேண்டும் எனக்கு
அதிஷ்டமான பிள்ளைப்போல் வாழ எனக்கு
கிடைக்கும் அவ்வுலகம் எப்போ எனக்கு



## வாடாத ரோஜா



வாடாத மலரே ரோஜா வண்ணமும் பண்பும் சேர்ந்து
தேனாக மொழிந்த ஈசன் திருக்கரந்தனிலே பூத்த
பூவாக உன்னைக் கண்டேன்! புண்ணியன் சாயலுந்தன்
வாழ்நாளில் முழுதாய்க் கண்டேன்! மலரே உன் மகிமை என்னே!

தெல்லியூர் திருச்சபையில் தொனித்திட்ட மணியின் ஓசை
அள்ளியெம் இதயந்தன்னில் அமலனை நினைக்க வைக்க
உன்னையும் கண்டேன் தாயே, உவப்புடன் வீணை மீட்டு
இன்னிசை இசைத்த கோலம் இதயத்தை உருக்குதம்மா!

பாலரைப் பாடவைத்தாய், பண்ணுடன் இசைக்க வைத்தாய்,
தாய்க்குலம் மத்தியிலும் தனித்தொண்டு தளைக்க வைத்தாய,
ஆலயப் பணிகளெல்லாம் அழகுறப் பொலிய வைத்தாய்,
ஆயனாம் யேசுபிரான் அடியினைத் தொடர்ந்து தாயே!

அடுத்தவர் எவருமுந்தன் அன்பினுக்குரிய ரென்று
பரந்த உன் பற்றால் மக்கள் பக்தியைப் பெற்றுக் கொண்டு,
அரியநற் சேவையாற்றி, ஆண்டவன் யேசின் சாட்சி,
புரிந்து நீ வாழ்ந்தாய், அம்மா, புண்ணியன் புகழுக்காயே!

இறைவனே ஆக்கியெமக் கீந்திட்ட ஓவியம் நீ!
இதயமோ அன்பின் ஊற்று! முகம் அதன் பிரதி பிம்பம்!
சிரிப்புமோர் இன்பக்கீதம்! சிந்தையும் செயலுமொன்றாய்
அளித்தாரே இறைவன் அருள்! அண்ணலே போற்றி! போற்றி!

திருமதி. சோதி ராஜரட்ணம்
(மறைந்த றோஸ் துரைரட்ணம்
அவர்களின் நூறாவது பிறந்த தின
நினைவையொட்டி ஞாபகார்த்த கவிதை)

## தென்னிந்திய திருச்சபை காந்திஜி கிராமம் தொழிற்கல்வி நிலையம்



தென்னிந்திய திருச்சபை காந்திஜி கிராமம் தொழிற்கல்வி நிலையத்தின் பயிற்சி நிறைவு விழா கோலாகலமாக நடைபெற்றது இதில் பிரதம விருந்தினராக திரு C.D சின்னக்கோன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார் பிள்ளைகளின் கலைவிழாவுடன் அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## சிறுவரின் மனதில் எழும் எதிரான உணர்வுகள்

பிலிப்பு என்னும் சிறுவனின் தற்கால போர் அனர்த்தங்களின் அனுபவங்களின் அடிப்படையில் அவன் வளர்ச்சி குன்றியவன், குழப்படிக் காரன், மக்கு, மடையன் என்று தவறான இடைபோடு வதை தடுக்கவேண்டும் சிறுப்பிள்ளைகள் அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தை அவர்களின் வயது ஆட்தன்மை கலாச்சாரம் சமூகம் என்பவையே நிர்ணயிக்கும் இவற்றுள் சில

- பயம், திகில், பயப்பீதி
- துக்கம், ஏக்கம், இழப்பின் துயரம்
- அனர்த்தம் பற்றிய நினைவுகளும் உணர்வுகளும் அடிக்கடி மனதை அலைக்கழித்தல்
- நித்திரைக் கொள்ள முடியாதிருத்தல்
- பயங்கர கனவுகள்
- கோபம், ஒத்துபோகாத தன்மை, தன்னை மற்றுமே கவனிக்க வேண்டும் என்ற பிடிவாதம்.
- குற்றவுணர்வு, நடந்த அனர்த்தத்திக்கு தானே காரணமோ என்ற குற்றவுணர்வு.
- மற்றவர்களிடம் இருந்து ஒதுங்கி இருத்தல், தனிமையை நாடுதல்.
- எதிலும் கவனம் செலுத்த முடியாதிருத்தல், அதிக்கூடிய செயற்பாடு அல்லது ஏனோ தானோ என்று இருத்தல்.
உடல் ரீதியான நோய்கள் (வயிற்றுவலி, தலைவலி, நித்திரையில் சலம் கழித்தல், வாந்தி)

**இப்படியான அனர்த்தங்களால் அல்லலுறும் சிறுவர்களுக்கு திருச்சபை முதலிடம் கொடுத்து அவர்கள் மன வடுக்களை தீர்க்க முயல்வது முக்கிய கடமையாகும்.**

## சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வர இடங்கொடுங்கள் அவர்களை தடைபண்ணாதிருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org